# சுவிஸ் தமிழ்க் கத்தோலிக்க ஆன்மிகப் பணியகம் நடாத்தும் மறை அறிவுப் போட்டிகள் - 2025

### பிரிவு 2 (2018 ம் ஆண்டில் பிறந்தவர்கள் வயது 7)

**விவிலிய வினாவிடைப் போட்டி (சரியான விடையைத் தெரிவு செய்தல்)**

1. உலகைப் படைத்தவர் யார்? **இறைதந்தை**
2. கடவுளின் படைப்பில் தலைசிறந்தது எது? **மனிதன்**
3. ஆதி பெற்றோரின் பெயர்? **ஆதாம், ஏவாள்**
4. ஆதாம், ஏவாளின் பிள்ளைகளின் பெயர் என்ன? **காயீன், ஆபெல்**
5. நம்பிக்கையின் தந்தை என அழைக்கப்படுபவர் யார்? **ஆபிரகாம்**
6. ஆபிரகாமின் மனைவியின் பெயர் என்ன? **சாரா**
7. ஈசாக்கின் இரண்டாவது மகனின் பெயர் என்ன? **யாக்கோபு**
8. யாக்கோப்பின் பிள்ளைகளுள் கனவிற்கு விளக்கம் கொடுத்தவர் யார்? **யோசேப்பு**
9. மோசேயின் மனைவி பெயர் என்ன? **சிப்போரா**
10. இஸ்ராயேலரின் முதல் அரசன் யார்? **சவுல்**
11. கோலியாத்தை வென்ற சிறுவன் பெயர் என்ன? **தாவீது**
12. கடவுளிடம் ஞானத்தை கேட்ட மன்னன் யார்? **சாலமோன்**
13. திருவருட்சாதனங்கள் எத்தனை? **7**
14. கடவுளின் கட்டளைகள் எத்தனை? **10**
15. இயேசு எங்கே பிறந்தார்? **பெத்லேகேம்**
16. இயேசு பாலை நிலத்தில் எத்தனை நாள் நோன்பிருந்தார்? **40**
17. இயேசு முதல் அருளடையாளத்தை எங்கு நிகழ்த்தினார்? **கானாவூர் திருமணத்தில்**
18. இயேசுவின் அன்புச் சீடர் யார்? **புனித யோவான்**
19. இயேசு எத்தனை திருத்தூதர்களைத் தெரிந்தெடுத்தார்? **12**
20. பெத்தானியாவில் வாழ்ந்த மார்த்தா, மரியாவின் சகோதரன் பெயர் என்ன? **இலாசர்**
21. திருமுழுக்கு யோவானின் பெற்றோரின் பெயர் என்ன? **எலிசபேத், செக்கரியா**
22. திருமுழுக்கு யோவானின் தலையை வெட்டி ஒரு தட்டில் வைத்து இங்கேயே எனக்குக் கொடும் என்று ஏரோது மன்னனிடம் கேட்டது யார்? **ஏரோதியாளின் மகள்**
23. இயேசுவுக்கு மரணதண்டனை தீர்ப்பை வழங்கியவர் யார்? **பிலாத்து**
24. இயேசு சிலுவை சுமந்து சென்ற போது அவரது முகத்தை வெண்துணியால் துடைத்த பெண்ணின் பெயர் என்ன? **வெரோணிக்கா**
25. இயேசுவைக் காட்டிக்கொடுத்தவர் யார்? **யூதாஸ் ஸ்கரியோத்**
26. உயிர்த்த இயேசுவை முதன்முதலில் கண்டவர் யார்? **மகதலா மரியா**
27. இயேசு இறந்து எத்தனையாம் நாள் உயிர்த்தெழுந்தார்? **3**
28. திருச்சபையின் முதலாவது திருத்தந்தை யார்? **புனித பேதுரு**
29. நமது திருத்தந்தையின் பெயர் என்ன? **திருத்தந்தை பதினான்காம் லியோ**

**30. பின்வரும் இறைவார்த்தைகள் பரீட்சையின் போது முன்பின்னாக குழப்பி தரப்படும். அவற்றை வரிசைப்படுத்தி எழுத கற்றுக் கொள்ளுங்கள்**

"நான் ஆண்டவரின் அடிமை, உம் சொற்படியே எனக்கு நிகழட்டும்." லூக்கா 1: 38

## மனனப்போட்டி (மனப்பாடம் செய்து சமர்ப்பிக்க வேண்டும்.)

## ஆண்டவரே நம் ஆயர்

ஆண்டவரே என் ஆயர்; எனக்கேதும் குறையில்லை, பசும்புல் வெளி மீது எனை அவர் இளைப்பாறச் செய்வார்; அமைதியான நீர்நிலைகளுக்கு எனை அழைத்துச் செல்வார். அவர் எனக்குப் புத்துயிர் அளிப்பார்; தம் பெயர்க்கேற்ப எனை நீதிவழி நடத்திடுவார்; மேலும், சாவின் இருள்சூழ் பள்ளத்தாக்கில் நான் நடக்க நேர்ந்தாலும், நீர் என்னோடு இருப்பதால் எத்தீங்கிற்கும் அஞ்சிடேன்; உம் கோலும் நெடுங்கழியும் என்னைத் தேற்றும், என்னுடைய எதிரிகளின் கண்முன்னே எனக்கொரு விருந்தினை ஏற்பாடு செய்கின்றீர்; என் தலையில் நறுமணத் தைலம் பூசுகின்றீர்; எனது பாத்திரம் நிரம்பி வழிகின்றது. உண்மையாகவே, என் வாழ்நாள் எல்லாம் உம் அருள் நலமும் பேரன்பும் என்னைப் புடைசூழ்ந்து வரும்; நானும் ஆண்டவரின் இல்லத்தில் நெடுநாள் வாழ்ந்திருப்பேன்.

## பாடல் போட்டி (மனப்பாடம் செய்து பாட வேண்டும்.)

அம்மா உந்தன் அன்பினிலே
அருள்வாய் எமக்கு அடைக்கலமே (2)

இறைவன் படைத்த எழிலே
இயேசுவைத் தந்த முகிலே -2
தூய்மை பொழியும் நிலவே
துணையே வாழ்வில் நீயே

புவியோர் எங்கள் புகழே
புனிதம் பொங்கும் அழகே -2
உன் மகன் புதிய உறவில்
எம்மையும் அறியச் செய்வாய்